இந்திய மிஷனெரி சங்கம்
முழங்கால் யுத்த செய்தி
வாலிபர் பிரிவு
பிப்ரவரி 2022

**அன்பான வாலிப உள்ளங்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.**




இதயமே நம் உடலின் முக்கியமான உறுப்பு அது நின்று போனாள் நம் ஜீவன் போய் விடும், அதைப்போலவே ஆவிக்குரிய நிலையில் நாம் பார்க்கும் போது, இதயத்திலிருந்து தான் நம்முடைய எல்லா எண்ணங்களும் உருவாகி, நம் செயலாய் மாறுகிறது. நம்முடைய இருதயம் பரிசுத்தமாய் இருந்தால், நம் வாழ்க்கையும் பரிசுத்தமாய் இருக்கும், அதே வேளையில் நம்முடைய இருதயத்தில் அசுத்தமான காரியங்கள் காணப்படும் என்றால் நாம் பாவ வாழ்க்கைக்குள் விழுந்து விடுவோம் இயேசு கிறிஸ்து இருதயத்தைக்குறித்து இவ்வாறாக சொல்கிறார் ‘‘மனுஷருடைய இருதயத்திற்குள் இருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலைப் பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், பகட்டும், காமவிகாரமும், வன்கண்ணும், துஷ்ணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார் (மாற்கு 7:21-23) எல்லாவற்றை பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது ( எரே 17:9) ஆகவே நம் இருதயத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும் அது நம்முடைய பெலத்தால் முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. தேவ மனிதன் தாவீதும் கூட தன் இருதயத்தில் விபச்சாரம் என்ற எண்ணம் கொண்டு பாவத்தில் வீழ்ந்தான், பிறகு தான் செய்த பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டு, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும் என்று தன் இருதயத்தை ஒப்புக்கொடுத்து கெஞ்சின தாவீதின் இருதயம் சுத்தமாகி, ஆண்டவருடைய இருதயத்திற்கு ஏற்றவனாய் மாறினான். அன்பான வாலிப தம்பி, தங்கச்சி, செல்போன் மற்றும் Internet மூலம் வரும் தவறான ஆசைக்காட்சிகள், தவறான நண்பர்கள், மறைமுகமான பாவங்கள் மூலம் உங்கள் இருதயம் அசுத்தப்பட்டு காணப்பட்டு பாவ வாழ்க்கையில் விழுந்து கிடக்கிறீர்களா? உன் இருதயத்தை எனக்கு தா என்று கேட்கும் ஆண்டவரிடத்தில் உங்கள் இருதயத்தை கொடுத்து பாருங்கள், உங்கள் இருதயமும், வாழ்வும் பரிசுத்தமாகும். கர்த்தர் தாமே உங்களோடிருந்து உங்களை நடத்துவாராக...

**Rev.D.இம்மானுவேல் பொன்துரை** பொதுக்காரியதரிசி



அமெரிக்கா நாட்டிலுள்ள கலிபோர்னியா மாநிலத்தை சேர்ந்தவள் தான் சீமாட்டி மெர்லின். பணக்கார குடும்பதைச் சேர்ந்தவளாதலால் வாழ்க்கையில் எந்தவித துன்பத்தையும் அனுபவிக்காமல் சுகபோகமான வாழ்க்கை வாழந்து வந்தாள்.

மெர்லின் பொழுதுபோக்குகளில் அதிக நாட்டமுடையவள். அதிக நேரத்தை அதிலேயே செலவிடுவாள், அவள் வெகு சீக்கிரத்தில் ஒரு சிறந்த நாட்டியக்காரியாகவும் மாறினாள்.

ஒரு நாள் வெளியே சென்று விட்டு வீடு திரும்பும்போது சுவர்களில் எங்கு பார்த்தாலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்ததை கண்டாள். தன் காரை நிறுத்தி அதை வாசித்துப் பார்த்தாள், கடவுளைப் பற்றிச் சொல்லும் படியாக ஒரு தெய்வீக மனிதர் அந்த ஊருக்கு கடந்து வருவதாக அதில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. மெர்லின் அந்த நபரின் பெயரை படித்ததும். இவர் பெரியமனிதர் அல்லவா! இவரைப் பற்றி நான் அதிகம் கேள்விப் பட்டிருக்கிறேன் என்று சிந்தித்தவாறே தன் வீட்டை அடைந்தாள்.

அடுத்தநாள் அவள் வீட்டில் வேலை பார்க்கும் ஒரு பணிப்பெண் தான் நேற்றைய தினம் கிறிஸ்தவக் கூட்டத்திற்கு கடந்து சென்றதையும், அங்கு நடைபெற்ற நிகழ்சிகளையும் பற்றி சொன்னாள். இதைக் கேட்ட மெர்லின் மனதிலும், ஒரு விருப்பம் வரவே, அன்று சாயங்கால கூட்டத்திற்கு அவளும் புறப்பட்டாள்.

மெர்லின் தன் காரை ஓட்டிச் செல்லும்போதே கூட்டம் கூட்டமாக மக்கள் அந்த மைதானத்திற்கு செல்வதைப் பார்த்தாள். தனக்கு அந்த கூட்டம் பிடிக்கவில்லையெனில் இடையில் எழுந்து வெளியே வந்துவிட வசதியான ஒரு இடத்தில் காரை நிறுத்தி உள்ளே சென்றாள். சற்று நேரத்தில் அந்த கூட்டம் ஆரம்பித்து நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன. அவள், இத்தனை நாட்கள் சென்ற கேளிக்கை நிகழ்ச்சிகளிலிருந்து இது வித்தியாசமானதாகவும், அவள் மனதிற்கு ஒரு அமைதியை கொண்டு வருவதாகவும் இருந்தது.

கூட்டம் முடியும் இறுதி நேரத்தில் மக்கள் பலர் தங்கள் பாவத்திற்காக மனம் உடைந்து, அழுதுகொண்டிருந்தனர். அந்த மனிதர் மேடையிலிருந்து சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும் அவளுக்காகவே பேசப்பட்டதாக உணர்ந்தாள். நீ செய்த பாவங்கள் எவ்வளவு கொடிதானாலும், இயேசுவிடம் அறிக்கையிடு, இன்றே அதை விட்டு விடு, நிச்சயம் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நீ சொர்க்க வாழ்வை அனுபவிப்பாய் என்று அவர் பிரசங்கித்தார்.

இதைக் கேட்ட மெர்லின், தான் கடவுளை விட்டு தூரம் போன பாவி என்று உணர்ந்தாள். ஆனால் அது ஒரு நிமிடம் தான் நீடித்தது. மறுவிநாடி அவள் எண்ணம் மாறியது. ஐயா! நாளை ஒரு முக்கிய நடன நிகழ்ச்சி உள்ளதே. ஆயிரக் கணக்கான மக்களுக்கு முன் நான் ஆட வேண்டுமே, இன்று என் வாழ்வை நான் இயேசுவுக்கு கொடுத்தால், நாளை எப்படி நடனமாட முடியும்? என்று யோசித்தாள். மெர்லின் தன் டைரியில், 'இன்று அல்ல, இன்று அல்ல, நாளை நான் இயேசுவை என் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்வேன்' என எழுதிக் கொண்டவளாய் அந்தக் கூட்டம் முடியும் முன்னரே மனப் போராட்டத்துடன், காரை எடுத்துக் கொண்டு வேகமாகத் தன் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

மெர்லினுடைய உள்மனதில் திரும்பத் திரும்ப அந்த தேவமனிதரின் வார்த்தைகள் ஓடினாலும், அவள் "இன்று அல்ல, இன்னும் ஒரே ஒரு ஆட்டத்திற்குப் பின் நாளை மனம் மாறுவேன்" என்று நினைத்தவாறே நான்கு வழி ரோட்டில் காரை ஓட்டினாள். அப்போது எதிர்புறமாக இருந்து வந்த ஒரு லாரி மின்னல் வேகத்தில் அவள் காரை மோதியது. கார் சுக்கு நூறாக உடைந்தது. இரத்த வெள்ளத்தில் மெர்லின் அந்த இடத்திலே பிணமாக கிடந்தாள். அவள் எழுதி வைத்திருந்த டைரியும் அங்கு திறந்து கிடந்தது. 'இன்று அல்ல, இன்று அல்ல, நாளை நான் இயேசுவை என் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்வேன்' என்ற வரிகளுடன்...

பிரியமானவர்களே, நாளையை சந்திப்பதற்கு முன் அவள் இருளுக்குள் சென்று விட்டாளே! நாளை என்பது நம்முடைய கையில் இல்லை. நல்ல தீர்மானங்களை எடுக்க காலந்தாழ்த்துவது நல்லதல்ல. அதினால் நாம் அவற்றை இழந்துபோக நேரிடலாம் – மெர்லினைப் போல.

நாம் இந்த பூமியில் வாழும் வாழ்க்கை நிலையற்றது. நிச்சயம் மரணம் ஒருநாள் நம்மை சந்திக்கும். அதற்குப் பின்னர் தான் நமக்கு என்றும் அழிவில்லாத ஒரு வாழ்க்கை ஆரம்பமாக உள்ளது. இந்த பூமியில் நாம் செய்யும் தவறுகளுக்கு பின்னர் நாம் அனுபவிக்கும் தண்டனை முடிவில்லாத நரக வாழ்க்கையே. நித்திய வாழ்வைப் பெற இயேசுவிடம் திரும்புங்கள். இன்றே தீர்மானம் எடுங்கள்.

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி 28:13)**

**சகோதரர் T.துரைராஜ்**

# A.தனசிங்
# T.ரோஸ்லின் தீபா



## மிஷனெரியின் அனுபவ சாட்சி

என் பெயர் A.தனசிங், நான் திருநெல்வேலி மவாட்டம் சிவலசமுத்திரம் சேகரம், இலந்த குளம் என்ற ஓர் சிறு கிராமத்தில் எனது குடும்பத்தில் இரண்டாவது மகனாக பிறந்தேன். எனது சிறு வயதில் ஏற்பட்ட பெலவீனத்தின் போது மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் எங்கள் கிராமத்தில் சபை இல்லாத கால கட்டத்தில், நல்லூர் ஆலய வாசலில் கிடத்தி 5 பைசா காணிக்கை செலுத்தி இந்த பிள்ளைக்கு நீர் ஜீவனை கொடுப்பிரானால், இந்த பிள்ளை உமது ஊழியத்தை செய்வான் என எனது பாட்டியம்மா ஒப்பு கொடுத்து ஓர் சிறிய அர்ப்பணிப்பின் ஜெபம் செய்துள்ளார்கள்.

நான் வளர்ந்து வரும் போது எனக்கு இந்த காரியத்தை குறித்து அவ்வபோது நினைவூட்டுவார்கள், எனது 16வது வயதில் எனக்கு கால் முறிவு ஏற்பட்டு 90 நாட்கள் மருத்துவமனையில் இருந்தேன். இரண்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட போதிலும் பலன் அளிக்கவில்லை, இறுதியில் மருத்துவர்கள் நடக்க இயலாது, சிகிச்சை பலன் அளிக்கவில்லை இனி உங்கள் கடவுள்தான் உங்களுக்கு உதவ வேண்டும் என்ற போது, மருத்துவமனை ஊழியத்துக்கு ஓர் சகோதரர் வந்தார்கள். அவர்கள் கொடுத்த கைபிரதியில் எழுதப்பட்ட ஓர் சாட்சி, கர்த்தர் செய்த அற்புதம் பற்றி நான் வாசித்த போது, எனக்கும் நடக்க உதவி செய்யும் இயேசுவே நானும் உமது ஊழியத்தை செய்ய என்னை அர்ப்பணிக்கிறேன் என்று ஜெபித்தேன்.

கர்த்தர் என்னை நடக்க செய்தார், பின்பு எனது குடும்ப சூழ்நிலை காரணத்தால் படிப்பை விட்டு வேலை செய்ய கடந்து சென்றேன், திருப்பூர் பட்டணத்தில் பணியாற்றி கொண்டு இருக்கும் போது 2007ம் ஆண்டு கர்த்தர் என்னோடு வசனத்தின் மூலம் பேசினார். உடனே நான் குறுகிய கால வேதாகம பயிற்சி எடுக்கும் படி சென்றேன். கர்த்தர் கொடுத்த வாக்குதத்ததின்படி கிராமங்களில் சிறுவர்கள், வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தேன். 2008ம் ஆண்டு மிஷனெரியாக வேண்டுமென்ற ஓர் தரிசனத்தை கொடுத்து வடஇந்தியா ஊழியத்திற்கு அழைத்தார், உடனே ஒப்புக்கொடுத்து IMS ஊழியத்தை தொடர்பு கொண்டபோது பொதுகாரியதரிசி ஐயா அவர்கள் ஓர் வாய்ப்பு வழங்கினார்கள், அதன்படி 3 ஆண்டுகள் பீகார், சிக்டா பணித்தளத்தில் ஊழியம் செய்யவும், பின்பு கர்த்தர் 2011ம் ஆண்டு மிஷனெரி ரோஸ்லின் தீபா அவர்களை திருமணம்

செய்யவும், கிருபை செய்தார். குடும்பமாக ஜார்கண்ட் மாநிலம் கோனார்டேம் பணி மையத்தில் 1 1/4 வருடம் பணி செய்து கொண்டு இருந்த போது, அஸ்ஸாம் ஜாகிரோடு பணிதளத்துக்கு கடந்து சென்று 10 ஆண்டுகளாக பணி செய்து வருகிறோம். ஆத்துமாக்களை சம்பாதிக்கவும், ஆலயங்கள் கட்டவும், அனேகரை ஊழியர்களாக பயிற்சிக்கவும், கர்த்தர் ஊழியத்தின் பாதையில் பயன்படுத்தி வருகிறார்.

இந்த சாட்சியினை படிக்கும் ஒவ்வொரு தம்பி தங்கைகளுக்கு நான் கூறுவது, உங்கள் வாழ்வை கர்த்தருக்கு ஒப்பு கொடுக்கும் போது, உங்கள் வாழ்க்கை ஓர் அர்த்தம் உள்ள வாழ்வாகவும், அதனுடைய அடிசுவடுகள் இந்த தரனியில் பதிக்கப்படுவதோடு, தேவனுடைய இராஜ்யத்தின் பெருமிதத்திற்குரிய பாத்திரமாய் கனத்துக்குரிய ஸ்தானத்தை பெருவீர்கள் என்பது நிச்சயம். ஆமென்...

## இந்திய மிஷனெரி சங்கம்-திருநெல்வேலி
## ஜாகிரோடு பணித்தளம் அஸ்ஸாம்

**மிஷனெரி: A.தனசிங் மனைவி: ரோஸ்லின் தீபா மகள்: அனோக்கா ஜேஸ்லின், 4th Std மகன்: அனுக்கிரஹ் சிங், 1st Std – டோனாவூர்**

1. மாவட்டம்: 33
2. மக்கள் தொகை: 3.09 கோடி (2011 கணக்குபடி)
3. மக்கள் இனங்கள்: 40, மொழிகள், கலாச்சாரங்களும் அடங்கும்
4. மக்களின் தொழில்: விவசாயம், பாக்கு, தேயிலை, சணல்
5. பணித்தள ஆரம்பம்: 03.09.2003 (18 ஆண்டுகள்)
6. சந்திக்கப்படும் மாவட்டங்கள்: 6 (கர்பீயாங்லாங், மோரீகாவ், நாவ்காவ், பொங்கைகாவ்,கோக்கரஜார்,கொஜாய்)
7. சந்திக்கப்படும் மக்கள் இனம்:6 (கர்பீ, சந்தாலி, பெங்காலி, தீவா, அஸ்ஸாமியா, நேபாளி)
8. ஆலயங்கள்: 4, கிராமங்கள் (உம்பண்னை, இன்சி இன்லாங்சோ, கமர்பா, சேல்மாரி)
9. மொத்த விசுவாசிகள்: 220
10. விடுதி: 1 (10 பிள்ளைகள்)
11. பாலர் பள்ளி: 1 (30 மாணவர்கள்) துரங்கிராமம் சுற்றிலும் 8 கிலோமீட்டர் எந்தவித பள்ளிகளும் இல்லாதநிலை, அதோடு தகவல் தொடர்புகள், மருத்துவ வசதிகளும் இல்லாத இப்பகுதிகளில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெற
12. சந்தித்து வரும் மொத்த கிராமங்கள் : 170



## ஜெப குறிப்புகள்:

1. இந்தியாவில் அதிக அளவில் பெண்கள் குடிப்பழக்கத்துக்கு அடிமையாக இருப்பதில் அஸ்ஸாம் மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. குறிப்பிடத்தக்கது, பெண்கள் குடிப்பழக்கத்தில் இருந்து விடுபட ஜெபிப்போம்.
2. அம்சோய் கிராமத்தில் சகோதரி ஹிராமத்தி அவர்களுக்கு சுகர், இரத்த அழுத்தம் போன்ற பெலவீனத்தில் இருந்து சுகம் கிடைக்கப்பட
3. கொஜாய் மாவட்டத்தில் சந்தோஷ், செம்பா தம்பதிகளுக்கு விரோதமாக அவர்களது உறவினர்கள் செய்துள்ள செய்வினை மூலம் பெலவினப்பட்ட அவர்களுக்கு சுகம் கிடைக்கப்பட
4. இந்த மாநிலத்தில் மக்கள் பலவிதமான மூட பழக்க வழக்கங்களிலும், மாந்திரீக கட்டுகளிலும், குடி, விபச்சாரங்களிலும் சிக்கி கிடக்கும் இவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
5. இங்குள்ள பிள்ளைகளுக்கு நல்ல கல்வி, மருத்துவம், வேலை வாய்ப்புகள் கிடைக்க வேண்டி
6. இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களை கிராமத்தைவிட்டு வெளியேற்றிவிடும் நிலை மாற ஜெபிப்போம்
7. பிமோல் மற்றும் மங்கள்பே இவர்கள் நம்முடைய ஊழியர்கள் கிராமங் களுக்குள் சுவிசேஷம் அறிவிக்க செல்லும் போதெல்லாம் வந்து தடை கூறி வருகிறார்கள் இவர்கள் மனம்மாற ஜெபிப்போம்.
8. ஜோனத்தான் ரோங்பீ இவருக்கு பக்கவாத நோயில் இருந்து சுகம் கிடைக்க...
9. பர்க்கப் கிராமத்தில் ஊழியர்கள் சென்று மக்களை சந்தித்தால் யாருடைய வீட்டில் சுவிசேஷம் கேட்கிறார்களோ அவர்களுக்கு ரூ.10000 அபராதம் விதிக்கப்படும் என கிராமத்தில் கட்டுப்பாடு விதித்துள்ளனர் தடை மாற...
10. சகோதரி மீனாக்கி அவளுக்கு நல்ல வேலை கிடைக்க...

## துதிப்பதற்கு:

1. ஜாகிரோடு சகோதரி கீத்தா அவர்களுக்கு கண் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து முடிந்தமைக்காக கர்த்தரைத் துதிப்போம்.
2. நவினின் பிரிந்த குடும்பம் மறுபடியும் ஜெபத்தினால் இணைந்தமைக்காக கர்த்தரைத் துதிப்போம்.



# மிஷனெரி ஆசிரியர் தேவை...

## வாங்கபோன்...

எனது பெயர் ஜெனிபா, என்னையும் இங்கு சாட்சியாக நிறுத்திய என் தேவாதி தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். நான் கருவில் இருக்கும் போதே என்னைத் தெரிந்து கொண்ட தேவன் இதுவரை என்னை அதிசயமாகவே நடத்தி வருகிறார். எனது அம்மா அப்பா இருவரும் பாலியர் நண்பனில் சிறுவர் ஊழியம் செய்கி றார்கள். எனது இரண்டு அண்ணன்மார்களும் பல்வேறு வகையில் ஊழியம் செய்கிறார்கள்.

என் சிறுவயதிலிருந்தே என் பெற்றோர் என்னை கர்த்தருக்கேற்ற பாதையில் வளர்த்தார்கள், சினிமா பார்ப்பது போன்ற பழக்கங்கள் எங்களுக்கு சிறுவய திலிருந்தே இல்லை. விடுமுறை நாட்களில் நாங்கள் எங்கள் பெற்றோருடன் ஊழியத்திற்கு சென்று விடுவோம். அங்கு பாடல் சொல்லி கொடுப்பது, செய்கை செய்வது போன்ற பலவிதங்களில் நாங்கள் குடும்பமாக ஊழியம் செய்வோம். பொழுதுபோக்கிற்காக புத்தங்கள் படிப்போம். கிறிஸ்தவ கதை புத்தகங்கள் படிப்பது விசேஷமாக மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு படிப்பது எனக்கு மிகவும் பிடிக்கும். எனது பிறந்தநாள் ஆசிரியர் தினத்தன்று என்பதால் சிறுவயதிலிருந்தே ஆசரியராக வேண்டுமென்பதை விருப்பமாக வைத்திருந்தேன். ஒருநாள் அன்னை தெரசா புத்தகத்தை படிக்கும்போது அவர்கள் நினைவு தினம் எனது பிறந்தநாளில் தான் என்பதை அறிந்தபின் அதைப் படிப்பதில் எனக்கு மிகவும் ஆர்வம் ஏற்பட்டது. அதில் அன்னை தெரசா கணித ஆசிரியராக இந்தியாவிற்கு வந்தார் என்பதை வாசிக்கும் போது எனக்குள்ளும் மிகுந்த ஆசை வந்தது, கணித ஆசிரியராக வேண்டுமென நான் தொடக்கப்பள்ளியில் படிக்கும் போதே தீர்மானித்தேன்.

பெற்றோருடன் சேர்ந்து அநேக ஞாயிறு பள்ளி வகுப்புகள் மற்றும் VBS நடத்தியுள்ளேன். தொடக்கப்பள்ளி முதலே என்னுடன் படிப்பவர்களுக்கு இயேசுவைப் பற்றி கூறுவேன். அதில் அநேகர் ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பின்னர் பல்வேறு ஊழியங்களில் இணைந்து தன்னார் வலராக ஆண்டவரின் பணியை செய்துள்ளேன். பின்னர் நண்பர்களுடனும், தனியாகவும் கிராமங்களுக்கு சென்று ஞாயிறு பள்ளி வகுப்புகள், வாலிபர் கூட்டம் நடத்தினேன். இப்படி பல்வேறு வகையில் ஆண்டவர் என்னை தமது கருவியாக பயன்படுத்தினார்.

இந்திய மிஷனெரி சங்கத்தில் ஆசிரியப் பற்றாக்குறை உள்ளது, என கேள்விப் பட்டேன். IMS வாலிபர் பிரிவு குழுவினர் நான் படித்த மெய்ஞானபுரம் கல்லூரி யில் கூட்டம் நடத்தினார்கள். அதில் அங்கு இருக்கும் நிலைமையை இன்னும்

தெளிவாகப் புரிந்துகொண்டு நானும் வருகிறேன் என அவர்களிடம் கூறினேன், ஆனால் அதற்குள்ளாக Lock Down ஆகிவிட்டது. ஒன்றரை வருடங்களாக போக்குவரத்து சரியாக இல்லாததால் என்னால் (வட இந்தியாவுக்கு) வர இயலவில்லை, அதன்பிறகு நவம்பர் 15ம் தேதி என்னை ஒடிசா மாநிலத்தில் பாலிமேளா பணித்தளத்தில் மிஷனெரி ஆசிரியையாக பணி நியமனம் செய்தார்கள், இங்கு வந்த பிறகு ஆசரியர்கள் தேவை இங்கு எவ்வளவு அதிகம் என்பதை தெரிந்துகொண்டேன். இங்கும் என்னால் இயன்ற அளவு ஆண்டவருக்காக பணிசெய்ய ஆண்டவர் தாமே உதவி செய்வாராக.

நம்மிடம் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஆண்டவர் நம்மோடு இருக்கும்போது அவர் கொடுக்கும் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் வேறு யாராலும் நமக்கு தர முடியாது.

நீங்களும் உங்களால் இயன்ற அளவு ஆண்டவருக்காக நேரத்தையும், தாலந்தையும் செலவு செய்யுங்கள், அவருடைய வழிநடத்துதல் நிச்சயமாக உங்களுக்கும் மிகவும் ஆச்சரியமாக இருக்கும்.



## பிறந்த நாள் கணக்கு...

1 இந்திய மிஷனெரி சங்கத்தில் பகல்நேர பராமரிப்பு மையங்கள் எத்தனை?

2 இந்திய மிஷனெரி சங்கம் சந்திக்கும் யூனியன் பிரதேசங்கள் எத்தனை?

3 இந்திய மிஷனெரி சங்கத்தில் எத்தனை பள்ளிகள் உள்ளன?

4 இந்திய மிஷனெரி சங்கத்தில் உள்ள மருத்துவ மையங்கள் எத்தனை?

5 இந்திய மிஷனெரி சங்கத்தினால் நடத்தப்படும் தையல் பயிற்சி மையங்கள் எத்தனை?

6 இந்திய மிஷனெரி சங்கத்தின் மிஷனெரி பயிற்சி மையங்கள் எத்தனை?

**முதல் இரண்டு விடையை பெருக்கி வரும் தொகையை மூன்றாம் விடையால் வகுத்து வரும் தொகையிலிருந்த நான்காம் விடையால் கழித்து வரும் தொகையோடு ஐந்தாம் ஆறாம் விடையைக் கூட்டினால் வருவது என்ன?**

**Mrs. D.ஜெயா துரைராஜ், IMS**

T.துரைராஜ், ஒருங்கிணைப்பாளர், **IMS வாலிபர் பிரிவு**
11B, திருவனந்தபுரம் ரோடு, திருநெல்வேலி-627 002 செல்: 9443978853 போன்: 0462-2502614
E-mail : youthwingimst@gmail.com Web : www.imst.co.in